# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.I, Mettur

**Case No : C.C. 324/2023**

**Prosecution witness : எ.ம.சா. 2** **Date : 21.02.2024**

| | |
|---|---|
| **Name : கார்த்திகேயன்** | **Taluk : கோயம்புத்தூர்** |
| **Father Name : திருமூர்த்தி** | **Calling : டிரான்ஸ்போர்ட்** |
| **Village : வடவள்ளி** | **Age : 31** |

**( Complainant and accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் கோவையில் வடவள்ளியில் குடியிருக்கிறேன். நான் டிரான்ஸ்போர்ட் வைத்துள்ளேன். எதிரி சுதாகர் என் அக்காவின் கணவர். எதிரி என் வீட்டிற்கு 13.05.2023 அன்று எங்கள் வீட்டிற்கு வந்தார். அன்று எங்கள் ஊரில் பண்டிகை என்பதால் அன்று இரவு எங்கள் வீட்டில் தங்கிவிட்டு 15.05.2023 ம் தேதி காலை 10.00 முதல் 10.30 மணியளவில் செங்கப்பள்ளியில் உள்ள அவரது அலுவலகத்திற்கு கிளம்பிசென்றார். சுமார் 12.00 மணியளவில் எனக்கு போன் செய்து நான் அலுவலகத்திற்கு வந்துவிட்டதாக சொன்னார். புகார்தாரர் எனக்கு தெரியாது. எதிரிக்கும் புகார்தாரருக்கும் உள்ள கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு தெரியாது. பணத்தேவையிருந்தால் எனது மாமா என்னிடம் தான் கேட்பார். வேறு யாரிடமும் கேட்கமாட்டார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டுர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C. 324/2023**

**Prosecution witness : எ.ம.சா. 3** **Date : 21.02.2024**

| | |
|---|---|
| **Name : சங்கர்சாமி** | **Taluk : ஊத்துக்குழி** |
| **Father Name : சின்னசாமி** | **Calling : சுயதொழில்** |
| **Village : ஊத்துக்குழி** | **Age : 47** |

**( Complainant and accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் ஊத்துக்குழி இரயில்வே நிலையம் அருகே திருப்பூர் மாவட்டத்தில் குடியிருக்கிறேன். நான் காஜா பட்டன் தொழில் செய்து வருகிறேன். எனக்கு எதிரியை கடந்த 7 வருடங்களாக தொழில் ரீதியாக பழக்கம். 15.05.2023 ம் தேதி மதியம் 1.00 மணியிலிருந்து 4.00 மணி வரை எதிரி எனது கடையில் தான் இருந்தார். எனது கடையில் 4.00 மணிவரை தொழில் ரீதியாக துணிகளை எடுப்பதற்காக எனது கடையில் தான் இருந்தார். புகார்தாரரை எனக்கு தெரியாது. புகார்தாரருக்கும், எதிரிக்கும் உள்ள கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**